# கொழும்புப் பல்கலைக்கழகம்

## கலைப்பீடம்

## .இரண்டாம் வருடக் கலைமாணிப்பரீட்சை (பொருளியல்)

## 2016/2017

## இரண்டாம் அரையாண்டுப்பருவ முடிவு

## ECN: 2228 உலகப் பொருளாதாரம்

நேரம் **<u>இரண்டு (02)</u>** மணித்தியாலங்கள்

<u>நான்கு (04)</u> வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகளைக் கொண்டுள்ளன.

---

1. "மானிட அபிவிருத்தி அறிக்கைகள் அபிவிருத்தி மீதான கவனத்தினை தேசிய வருமானக் கணிப்பீட்டிலிருந்து மக்களை மையமாகக் கொண்ட கொள்கைகளை நோக்கி நகர்த்துகின்றன."
    i. மேலுள்ள கூற்றினை சுருக்கமாகப் பரிசீலிக்குக.
    ii. தேசிய வருமானக் கணிப்பீட்டிலுள்ள பலவீனங்களை நீர் எவ்வாறு பரிசீலிப்பீர்?
    iii. உயர்ந்த தலாவருமானத்தினைக் கொண்டிராத போதிலும் இலங்கை எவ்வாறு உயர்ந்த மானிட அபிவிருத்திக் குறிகாட்டிகளை அடைய முடிந்தது?

2. "பின்விளைவுகள் ஒன்றாகக் காணப்பட்ட போதிலும் தற்போதைய உலக முரண்பாடுகள் அவற்றின் வரலாற்றுப் பின்புலம் மற்றும் அண்மைக்கால உலக அபிவிருத்திகள் என்பன தொடர்பில் வேறுபாடானவை".
    i. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.
    ii. தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மத்திய கிழக்கு நெருக்கடிகளை நீர் எவ்வாறு பரிசீலிப்பீர்?
    iii. தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் உலகளாவிய முரண்பாடுகளின் பொருளாதார ரீதியான பின்விளைவுகள் எவை?

3. "பொருட்கள் சேவைகளுக்கான கொடுக்கல் வாங்கல் கருவிகளாக வன் நாணயங்கள் உலகம் முழுவதும் பரவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன".
   i. வன் நாணயங்கள் மற்றும் மென் நாணயங்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை சுருக்கமாகப் பரிசீலிக்குக.
   ii. வன்நாணயங்களைக் கொண்டுள்ள நாடுகள் பெற்றுக்கொள்ளும் பிரதான பொருளாதார அநுகூலங்கள் யாவை?
   iii. இலங்கை நாணயத்தின் அண்மைக்காலச் செயலாற்றத்தினை நீர் எவ்வாறு பரிசீலிப்பீர்?

4. "இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கூட பல உலகப் பொருளாதார மந்தங்கள் ஏற்பட்டுள்ளன".
   i. பங்குச்சந்தை முறிவுகளுக்கும் பொருளாதார மந்தங்களுக்கும் இடையிலான தொடர்பு யாது?
   ii. ஒரு பொருளாதார மந்தத்தின் பிரதான பொருளாதார பின்விளைவுகள் எவை?
   iii. ஒரு பொருளாதார மந்தத்தினால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கத்தினை நிவர்த்தி செய்வதற்கு நீர் எதனை முன்மொழிகின்றீர்?

5. "இலங்கைப் பொருளாதாரத்தினைப் பொறுத்த வரையில் தோற்றம் பெறும் இந்தியா ஒரு சவால் என்பதை விட ஒரு வாயப்பாகக் கருதப்பட வேண்டும்".
   i. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.
   ii. 1990களின் ஆரம்பப் பகுதியிலிருந்து இந்தியப் பொருளாதாரமானது ஏன் ஒரு விதிவிலக்கான வேகத்தில் வளர்ச்சியடைந்தது?
   iii. பொருளாதார வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதில் இந்தியாவிடமிருந்து இலங்கை எதனைக் கற்றுக் கொள்ளலாம்?

6. "தலாவருமானத்தினை அடிப்படையாகக் கொண்டே உலக வங்கியானது உலக நாடுகளை வகைப்படுத்துகின்றது."
   i. உலக வங்கியின் நாடுகள் வகைப்படுத்தலினை சுருக்கமாக அடையாளங்காண்க.
   ii. இவ்வகைப்படுத்தலின் கீழ் தென்னாசிய பொருளாதாரங்களை நீர் எவ்வாறு பரிசீலிப்பீர்?
   iii. உலக வங்கி வகைப்படுத்தலிலுள்ள பிரதான பலவீனங்கள் எவை?

7. "21 ஆம் நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தினைப் பொறுத்த வரையில் ஆசியா பொருளாதார வளர்ச்சியின் இயந்திரமாக ஆகியுள்ளது."

   i. ஆசியாவின் உயர் பொருளாதாரச் செயலாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகள் எவை?
   ii. ஆசியாவின் உயர் பொருளாதாரச் செயலாற்றத்தின் பிரதான உலகளாவிய பொருளாதார பின்விளைவுகள் எவை?
   iii. விரைவாக வளர்ச்சியடையும் ஆசியப் பொருளாதாரங்களை எதிர்கொள்வதற்கேற்ற வகையில் இலங்கை காணப்படுகின்றதா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

8. பின்வருவனவற்றில் எவையேனும் **மூன்றிற்கு** (03) சிறு குறிப்பு எழுதுக.

   i. உலக மசகு எண்ணெய்ச் சந்தை
   ii. உலக வறுமை
   iii. வெளிநாட்டு நேரடி முதலீடு
   iv. வடக்கு-தெற்கு பிரிவுநிலை
   v. அமெரிக்கப் பொருளாதாரம்